**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்போரூர்**

**DVC.No.3/2024**

**PW.1**

**நாள்: 02.03.2026**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திருமதி. மீனா | வயது | |
| கணவர்/தந்தை பெயர் | | தொழில் | |

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

**எதிர்மனுதாரர்கள் தரப்பு குறுக்கு விசாரணை;**

2. நான் பத்தாம் வகுப்பு படித்துள்ளேன். நான் என் மனுவில் என்னென்ன பரிகாரங்கள் கேட்டுள்ளேன் என்றால் எனக்கும் என்னுடைய குழந்தைக்கும் பராமரிப்பு கோரியும் பாதுகாப்பு கோரியும் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். எனக்கும் 1 ஆம் எதிர்மனுதாரருக்கும் இடையே காதல் திருமணம் நடைபெற்றது. நானும் அவரும் 2006 ம் ஆண்டிலிருந்து காதலித்து வந்தோம். நானும் அவரும் வெவ்வேறு சமூகத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். நான் நாயுடு வகுப்பை சேர்ந்தவர். எதிர்மனுதாரர் கிறிஸ்துவ ஆதிதிராவிடர் வகுப்பை சேர்ந்தவர். நாங்கள் காதலிக்கும் போது எதிர்மனுதாரர் எனக்கு தேவையான பொருட்களை வாங்கி கொடுத்து நல்லபடியாக பார்த்துக் கொண்டார் என்றால் சரிதான். எனக்கு திருமணம் நடைபெற்ற போது என் அப்பாவிற்கு 48 வயது இருக்கும்.

3. நாங்கள் காதலிக்கும் போது என் அப்பா சிறியதாக ஒரு தையல் கடை வைத்திருந்தார் என்றால் சரிதான். நாங்கள் இருவரும் காதலித்தபோது நான் படித்துக்

கொண்டுதான் இருந்தேன் என்றால் சரிதான். எங்கள் காதல் விவகாரம் எங்கள் இரு குடும்பத்தார் வந்தபோது எதிர்மனுதாரர்கள் குடும்பத்தில் அதை ஏற்றுக் கொண்டார்கள் என்றாலும் எங்கள் குடும்பத்தில் அதனை எதிர்த்தார்கள் என்றால் சரியல்ல. என்னுடைய பெற்றோர் அதை ஏற்றுக் கொண்டார்கள். என்னுடைய உறவினர்களுக்கு எங்கள் திருமணம் குறித்து தெரியாது. எங்கள் திருமணம் குறித்து என் உறவினர்களிடம் சொல்லவில்லையா என்றால் ஆமாம். யாரிடமும் திருமணம் குறித்து சொல்லவில்லை. எதிர் மனுதாரர்கள் ஆதிதிராவிடர் வகுப்பை சேர்ந்தவர்கள் என்பதால் எங்கள் குடும்பத்திலிருந்து அந்த திருமணத்தில் யாரும் கலந்து கொள்ளவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய பெற்றோர் கலந்து கொண்டார்கள்.

3. எதிர்மனுதாரர்கள் ஆதிதிராவிடர் வகுப்பை சேர்ந்தவர் என்பதால் நான் தான் எதிர்மனுதாரர்களிடம் வெறுப்பாக நடந்து கொண்டேன் என்றால் சரியல்ல. என்னுடைய மனு பத்தி நான்கில் திருமணம் நடைபெற்று 10 ஆண்டுகள் கழித்து எதிர்மனுதாரர்கள் மீது இருந்த கோபம் தணிந்து என்னுடைய பெற்றோர் ரொக்கமாக ரூபாய் ஒன்பது லட்சம் கொடுத்தார்கள் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் திருமணம் நடைபெற்ற மறு ஆண்டே கொடுத்து விட்டார்கள். நானே என்னுடைய மனுவில் எனது பெற்றோர் எதிர்மனுதாரர்கள் வேறு சமுதாயத்தை சேர்ந்தவரை நான் திருமணம் செய்து கொண்டதால் கோபமாக இருந்ததாகவும் 10 ஆண்டுகள் கழித்து தான் எனக்கு சீதன பொருட்களை கொடுத்ததாக ஒப்புக் கொண்டுள்ளேன் என்றால் சரியல்ல. என்னுடைய பெற்றோர் எதிர்மனுதாரருக்கு ரூபாய் ஒன்பது லட்சம் கொடுத்ததற்கு ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

4. எனக்கு திருமணம் நடைபெற்று பத்து ஆண்டுகள் கழித்து எனது பெற்றோர் எதிர்மனுதாரருக்கு ரூபாய் 9 லட்சம் கொடுத்ததாக வைத்துக் கொண்டாலும் நான் குறிப்பிடும் காலம் கொரோனா நோய் தொற்று காலம் என்றாலும் அப்போது பணம் மதிப்பிழப்பு அமலில் இருந்தது என்பதால் எனது பெற்றோர் ரூபாய் ஒன்பது லட்சத்தை எதிர்மனுதாரருக்கு ரொக்கமாக கொடுத்திருக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. என்னுடைய மனு பத்தி 4ல் அச்சரப்பாக்கத்தில் உள்ள எனது பெற்றோருக்கு சொந்தமான 918 சதுரடி காலி மனையை வாங்கி கொடுத்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் இல்லை. நான் மனுவில் அவ்வாறு குறிப்பிட்டுள்ளது தவறு என்றாலும் ஒன்றாம் எதிர்மனுதாரர் தான் அந்த மனையை எனக்கு வாங்கிக் கொடுத்தார் என்றால் இல்லை. நான்தான் வேலைக்கு சென்று அந்த மனையை வாங்கினேன் அது ஒரு சென்ட் ரூபாய் 7000 மட்டும் தான்.

5. அந்த மனையை ஒன்றாம் எதிர்மனுதாரர் தான் வாங்கி கொடுத்தார் என்றால் சரியல்ல. நான் மனு பத்தி நான்கில் குறிப்பிட்டுள்ளபடி வீட்டு உபயோக பொருட்கள் ரூபாய் ஒரு லட்சத்திற்கே வாங்கி விடலாம் என்றாலும் என்னுடைய பெற்றோர் ரூபாய் ஒன்பது லட்சம் கொடுத்ததாக நான் குறிப்பிட்டுள்ளது தவறு என்றாலும் அந்த வீட்டு உபயோக பொருட்கள் அனைத்தும் 1ஆம் எதிர்மனுதாரர் தான் எனக்கு வாங்கிக் கொடுத்தார் என்றால் சரியல்ல. என்னுடைய மனு பத்தி ஐந்தில் ஒன்றாம் எதிர்மனுதாரர் என்னை ஒரு கேஸ் ஏஜென்சியில் வேலைக்கு சேர்த்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் இல்லை. நானாகத்தான் அதில் வேலைக்கு சேர்ந்தேன். நான் கேஸ் ஏஜென்சியில் எவ்வளவு காலம் வேலை பார்த்து வந்தேன் என்றால் நான்கு ஐந்து ஆண்டுகளாக வேலை பார்த்து வந்தேன்.

6. எப்போதிலிருந்து அங்கு வேலை பார்த்து வந்தேன் என்றால் 2015 ஆம் ஆண்டிலிருந்து 2019 வரை வேலை பார்த்தேன். நான் திருமணத்திற்கு பிறகு தான் அங்கு வேலைக்கு சேர்ந்தேன் என்றால் சரிதான். அங்கு எவ்வளவு சம்பளம் கொடுத்தார்கள் என்றால் ரூபாய் 18000 கொடுத்தார்கள். 1 ஆம் எதிர்மனுதாரர் கட்டுமான காண்ட்ராக்டராக வேலை செய்து வாதம் ரூபாய் 60,000 வருமானம் ஈட்டி வருவதாக சொல்லி உள்ளேன் என்றாலும் அதற்கு ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை. ஒன்றாம் எதிர்மனுதாரர் மாதம் ரூபாய் 20000 தான் வருமானம் ஈட்டி வருகிறார் என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. ஒன்றாம் எதிர்மனுதாரர் வீடு வாடகை ஏஜென்ட் ஆக தான் வேலை பார்த்து வருகிறார் என்றால் அந்த வேலையும் செய்வார். நான் மனுவில் பத்தி ஆறில் ஒன்றாம் எதிர்மனுதாரர் சரசு என்ற பெண்ணுடன் தகாத உறவில் உள்ளதாக பொய்யாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

7. ஒன்றாம் எதிர்மனுதாரர் அந்த பெண்ணுடன் தவறான உறவு உடன் உள்ளார் என்பதை உறுதிப்படுத்த நான் ஆவணங்கள் ஏதேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்து உள்ளேனா என்றால் வீடியோ ஆதாரம் உள்ளது. அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 2019 ஆம் ஆண்டு ஒன்றாம் எதிர்மனுதாரர் மீனா ஏஜென்சி என்ற பெயரில் எனக்கு கேஸ் ஏஜென்சி ஒன்றை வைத்துக் கொடுத்தார் என்றால் இல்லை. நான் நடத்தி வரும் கேஸ் ஏஜென்சியின் பெயர் என்னவென்றால் சபரி கேஸ் ஏஜென்சி என்ற ஏஜென்சி யின் சப் டீலராக தான் நான் தொழில் செய்து வருகிறேன். 2019 ஆம் ஆண்டின் நான் நடத்தி வந்த கேஸ் ஏஜென்சியில் சதீஷ்

என்பவர் ஓட்டுனராக வேலை செய்து வந்தாரா என்றால் இல்லை. அவர் பள்ளிக்கரணையில் உள்ள நோவா கேஸ் ஏஜென்சியில் தான் வேலை செய்து வந்தார்.

8. நான் சப் டீலராக தொழில் செய்து வரும் எஸ் ஏஜென்சிக்கும் அவர்தான் கேஸ்களை வெளியில் டெலிவரி செய்வார் என்றால் சரிதான். ஒன்றாம் எதிர்மனுதாரரும் உடன் செல்வார். 2020 ஆம் ஆண்டு ஒன்றாம் எதிர்மனுதாரர் கேஸ் ஏஜென்சியை ஒட்டி என் பெயரில் காய்கறி கடையையும் தொடங்கினார் என்றால் ஒன்றாம் எதிர்மனுதாரர் தொடங்கவில்லை. என் அப்பா தான் தொடங்கினார். அப்போது சதீஷ் என்பவர் அங்கு வருவது வழக்கம் என்றாலும் என்னுடன் சேர்த்து சதீஷ் கேஸ் டெலிவரியையும் காய்கறி வாங்கியும் வருவார் என்றால் சதீஷும் ஒன்றாம் எதிர்மனுதாரரும் தான் செல்வார்கள். நான் எப்போதாவது பண்டிகை காலங்களில் உடன் செல்வது வழக்கம். அவ்வாறு நானும் சதீஷும் வெளியில் செல்வதை பார்த்து ஒன்றாம் எதிர்மனுதாரரின் உறவினர் ரஞ்சித் என்பவர் ஒன்றாம் எதிர்மனுதாரிடம் சொன்ன பிறகு நாங்கள் சதீஷை வேலையை விட்டு நிறுத்தி விட்டோம் என்றால் சரியல்ல.

9. எனக்கும் சதீஷ் என்பவருக்கும் தவறான தொடர்பு இருந்தது என்றாலும் அதனை ஒன்றாம் எதிர்மனுதாரர் கண்டித்ததால் தான் அவருக்கு சரசு என்ற பெண்ணுடன் தொடர்புள்ளதாக இந்த வழக்கில் நான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. ஒன்றாம் எதிர்மனுதாரரின் அம்மா தன்னுடைய சொத்தை வங்கியில் அடமானம் வைத்து என்னுடைய தொழில் வளர்ச்சிக்காக ரூபாய் 10 லட்சம் கொடுத்தார் என்றால் இல்லை. அந்த கடன் தொகை என்னுடைய வங்கி கணக்கில் தான் வரவு

வந்தது என்றால் சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் ஈக்குடாஸ் வங்கியின் ஒப்புதல் கடிதத்தின் படி என்னுடைய பெயரில் தான் கடன் வழங்கப்பட்டதுஎன்றால் சரிதான். (**16/12/2021 தேதியிட்ட ஈக்குடாஸ் நிறுவனத்தின் கடன் அனுமதி கடிதம் எ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) 1 ஆம் எதிர்மனுதாரருக்கு தனிபட்ட கடன் இருந்ததால் அந்த நிறுவனத்தில் 1 ஆம் எதிர்மனுதாரர் கடன் பெற தகுதி இல்லாததால் என் பெயரில் கடன் வாங்கினார்.

**வேண்டுக்கோளின் பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**

NILAVARASAN KASI

Digitally signed by NILAVARASAN KASI

District Munsif cum Judicial Magistrate,
Thiruporur.